வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.2997/ஆ5/2025, நாள்.04.08.2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் – பள்ளிக் கல்வித்துறை, பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP 4.0) – 2025 – 2026 ஆம் கல்வியாண்டில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP 4.0) பள்ளிகளில் செயல்படுத்துதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048647/எம்1/இ1/2025, நாள். 03.07.2025

.....

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டு திட்டம் மற்றும் பள்ளிக் கல்வி துறையுடன் இணைந்து அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதி அளவில் உதவிபெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 2025–2026ஆம் கல்வியாண்டில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP 4.0) செயல்படுத்தும் பொருட்டு வழிகாட்டி ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகுக்கின்றார்கள் . **எனவே உயர்நிலைப் (6 முதல் 10 வரை செயல்படும்) பள்ளிகளில் வழிகாட்டி ஆசிரியர் ஒருவர் (பட்டதாரி ஆசிரியர் ஒருவர்) மற்றும் மேல்நிலைப் ( 6 முதல் 12 வரை செயல்படும்) பள்ளிகளில் இரண்டு வழிகாட்டி ஆசிரியர்கள் (முதுகலை ஆசிரியர் ஒருவர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் ஒருவர்) நியமிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வழிகாட்டி ஆசிரியர்களை தேர்வு செய்யும் போது அவர்கள் மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுபவர்களாகவும், தன்னார்வுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். வழிகாட்டி ஆசிரியர்கள் விவரம் 06.08.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் இணைக்கப்பட்டுள்ள Google Spread Sheet–ல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – google spreadsheet link
https://docs.google.com/spreadsheets/d/1y91ItYphmMpAOz1E6E0_9LyzVZrvJoyLZUiNb8xP8GI/edit?usp=sharing

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள் ,
வேலூர் மாவட்டம்.

நகல் –
மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி)
( தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)